உ

சிவமயம்

அபிடேக் ஆராதனை

(திருமுறைகளிலிருந்து)

தொகுப்பும் உரையும்
'தமிழ்க்கடல்','சிவமணி' 'சிவம்பெருக்குஞ்சீலர்'
'வண்கவி வள்ளல்'
ராய. சொ.

வெளியீடு.
தேவகோட்டை,
திரு. கா. அண்ணாமலை முதலியார்
சாந்தி விழா.
7-9-71.

ACC NO 38493

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 38493
27-4

உ
சிவமயம்

அபிடேக ஆராதனே

(திருமுறைகளிலிருந்து)

தொகுப்பும் உரையும்
'தமிழ்க்கடல்','சிவமணி' 'சிவம்பெருக்கும்சீலர்'
'வண்கவி வள்ளல்'
ராய. சொ.

வெளியீடு.
தேவகோட்டை,
திரு. கா. அண்ணுமலை முதலியார்
சாந்தி விழா.
7–9–71.



அத்தலை நின்ற மாயோன்

ஆதி,செங் கரத்து நங்கை

கைத்தலம் கமலப் போது

பூத்ததோர் காந்தள் ஒப்ப

வைத்து,அரு மனுவாய் ஓத,

கரகநீர்மாரி பெய்தான்;

தொத்தலர் கண்ணி, விண்ணோர்

தொழுதுபூ மாரி பெய்தார்.





கா. அண்ணுமலை முதலியார் – அங்கம்மாள்

அறுபதாம் ஆண்டு நிறைவு விழா 7–9–71.

உ

சிவமயம்

அபிடேக ஆராதனை.

நூல் முகம்

இந்நூல், சைவத்திருமுறை பன்னிரண்டினின்றும் திருமுறைக்கு ஐந்து விதம் அபிடேக ஆராதனைத் தொடர்புடைய அறுபது பாடல்களைக் கொண்டு தொகுக்கப்பெற்று, அறுபத்தோராவது பாடலாகப் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணத்தினின்றும் ஒரு போற்றிப் பாடலுடன் நிறைவெய்துகிறது.

திருமுறைகளினின்றும் தொகுக்கப்பெற்ற இந்நூல் அருமையானவை என்று சொல்லவும் வேண்டுமோ?

இதனை வெளியிட்டுப் புகழ்பெறுபவர் தேவ கோட்டை நித்தியகலியாணிபுரம் திரு. கா. அண்ணாமலை முதலியார் அவர்கள். அன்பர் முதலியார் திருமுறைகளில் நல்ல பயிற்சியுடையவர்; தெய்வ பக்தி நிறைந்தவர். அவர்தம் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவில் இந்நூல் வெளிவருகின்றது.

சாந்தி விழாவில் தேவார ஓதுவார் அறுபதுக்கும் மேற்பட்டவரைக் கொண்டு பாராயணம் செய்யச் செய்து, அவர்களுக்குக் கலசங்கள் வழங்குவது என அன்பர் முதலியார் துணிவு கொண்டிருப்பது, அவருக்குள்ள திருமுறைப் பற்றையும், தமிழ்ப் பற்றையும் காட்டுகின்றது.

சாந்தி மணம்பெறும் அண்ணாமலை முதலியார் அவர்தம் மனைவி அங்கம்மாள் இருவரும் எல்லா நலனும் பெற்று, பல்லாண்டு வாழக் கூத்தப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

அழகப்பாபுரம்
7—9—71.

ராய. சொ.

தேவாரம் – திருமுறை 1

பாலினுல், நறுநெய்யால்,
பழத்திஞல் பயின்ருட்டி,
நூலினுல் மணமாலே
கொணர்ந்துஅடியார் புரிந்துஏத்த,
சேலினுர் வயல்புடைசூழ்
செங்காட்டங் குடியதனுள்
காலினுல் கூற்றுதைத்தான்
கணபதீச் சரத்தானே.

— சம்பந்தர்

பயின்று ஆட்டி : பலகாலும் பழகி அபிடேகித்து. நூலினுல் : மறை முறைப்படி. புரிந்து : விரும்பி. சேலின் ஆர் : சேல்மீன்கள் நிறைந்த. கூற்று உதைத்தவன் : யமனே உதைத்தவனுன சிவபெருமான்.

பாலும் நெய்யும்
　　தயிரும் பயின்ருடித்
தோலும் நூலும்
　　துதைந்த வரைமார்பர்,
மாலும் சோலை
　　புடைசூழ் மடமஞ்ஞை
ஆலும் சோற்றுத்
　　துறைசென்று அடைவோமே.

— சம்பந்தர்

துதைந்த: அணிந்த. வரைமார்பர் : மலைபோல் அகன்ற மார்பினரான சிவபெருமான். மாலும் : மயங்கும். மஞ்ஞை : மயில். ஆலும் : ஆடும்.

காவினை இட்டும், குளம்பல
தொட்டும், கனிமனத்தால்
'ஏவினை யால்எயில் மூன்றுஎரித்
தீர்!'என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து மலர்அடி
போற்றுதும் நாம்அடியோம்;
தீவினை வந்துஎமைத் தீண்டப்பெ
ரு;திரு நீலகண்டம்.

— சம்பந்தர்

காவினை இட்டும்: நந்தனவனம் அமைத்தும். தொட்டும்:தோண்டியும். கனிமனம்: கனிந்த (பக்குவப்பட்ட) மனம். ஏவினையால்: அம்பின் தொழிலால். எயில்மூன்று: திரிபுரம். அடியார்கள் குளிர் சுரத்தால் வருந்தியபோது திருஞான சம்பந்தப்பெருமான் திரு நீலகண்டனை சிவபெருமான் மீது ஆணைவைத்து அல்லல் வாராஎன அருளிய பதிகப்பாடல் இது.

வண்ண மலரானும்,
வையம் அளந்தானும்,
நண்ணல் அரியானை,
நல்லூர்ப் பெருமானை,
தண்ணம் மலர்தூவித்
தாள்கள் தொழுதுஏத்த
எண்ணும் அடியார்கட்கு
இல்லை இடுக்கணே.

— சம்பந்தர்

வண்ணம் மலரான் : அழகிய தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமன். வையம் அளந்தான் : உலகளந்த திருமால். நண்ணல் : கிட்டல். தண் அம் : குளிர்ச்சியும், அழகும் பொருந்திய. இடுக்கண் : துன்பம்.

வம்பார் குன்றம் நீடுஉயர்
சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டு
யாழ்செய் குற்றாலம்
அம்பால் நெய்யோடு ஆடல்
அமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான் மேய நன்னகர்
போலும் நமரங்காள் !

— சம்பந்தர்

வம்புஆர் : நறுமணம் பொருந்திய. நீடுஉயர் : நீண்டு உயர்ந்த. கோலம் : அழகு. யாழ்செய்: வீணை போல ஒலிக்கும் . நம்பான் : நம்பனின் நீட்டல். நமரங்காள்: நம்மவர்களே.

கல்நெடிய குன்றுஎடுத்தான்
தோள்அடரக் கால்ஊன்றி,
இன்அருளால் ஆட்கொண்ட
எம்பெருமான் தொல்கோயில்,
பொன்அடிக்கே நாள்தோறும்
பூவோடு நீர்சுமக்கும்
தன்அடியார் ஆக்கூரில்
தான்தோன்றி மாடமே.

— சம்பந்தர்

கல்நெடியகுன்று: திருக்கயிலைமலை. அடர: நெரிய. தொல்: பழமையான. ஆக்கூர், தேவாரத்தலம். தான் தோன்றி மாடம், கோயிலுக்குப் பெயர். தான்தோன்றி அப்பர் இறைவனுக்குப் பெயர்.

செந்தமிழர், தெய்வமறை நாவர்,செழு
நற்கலைதெ ரிந்த அவரோடு,
அந்தம்இல்கு ணத்தவர்கள் அர்ச்சனைகள்
செய்யஅமர் கின்ற அரன்ஊர்;
கொந்தலர் பொழிற்பழன வேலி,குளிர்
தண்புனல்வ ளம்பெ ருகவே
வெந்திறல்வி ளங்கிவளர் வேதியர்,வி
ரும்புபதி வீழி நகரே.

— சம்பந்தர்

நாவர் : நாவைப் பெற்றவர். அந்தம்இல் : முடிவு அற்ற. அரன் : சிவன். கொந்து : கொத்து. பொழில் : சோலை. பழனம் : வயல். வெம்திறல் : விரும்பத்தக்க வலிமை. வீழிநகர் : திருவீழிமிழலை நகர்.

தொண்டர் அஞ்சு களிறும்
அடக்கி, சுரும்புஆர்மலர்
இண்டை கட்டி, வழிபாடு
செய்யும்இடம் என்பரால்;
வண்டு பாட, மயில்ஆல,
மான்கன்று துள்ள,வரிக்
கெண்டை பாய, சுனைநீலம்
மொட்டுஅலரும் கேதாரமே.

— சம்பந்தர்

தொண்டர்: அடியார். அஞ்சுகளிறு: ஐம்புலன்ஆகிய யானைகள். சுரும்பு: வண்டு. இண்டை: மாலை. சுனை நீலம்: சுனையிலுள்ள நீலோற்பலம். அலரும்: விரியும். கேதாரம்: இமயமலைச் சாரலிலுள்ள திருக் கேதாரமெனும் தலம்.

விளங்குஇழை மடந்தை,மலை
மங்கைஒரு பாகத்து
உளங்கொள இருத்திய
ஒருத்தன் இடம் என்பர்;
வளங்கெழுவு தீபமொடு,
தூபம்,மலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி
பாடுசெய் நள் ளாறே.

— சம்பந்தர்

இழை : ஆபரணம். உளங்கொள இருத்திய : விரும்பி அமர வைத்துக் கொண்ட. கெழுவு : மிகுந்த. நளன் : நளச்சக்கரவர்த்தி. கெழுவி : பொருந்தி.

வேன லானை வெருவ,உரி
போர்த்துஉமை அஞ்சவே,
வானை ஊடறுக் கும்மதி
சூடிய மைந்தனுர்;
தேன்,நெய், பால்,தயிர், தெங்குஇள
நீர்,கரும் பின்தெளி
ஆன்அஞ்சுஆ டும்முடி யானும்ஐ
யாறுடை ஐயனே.

— சம்பந்தர்

வேனலான் : மன்மதன். வெருவ : அஞ்ச. உரி : தோல். ஊடு அறுக்கும் : இடையே கிழித்துச் செல்லும். மதி சூடிய மைந்தனுர் : சந்திரனைத்தலையில் தரித்த சிவபெருமான். ஐயாறு : திருவையாறு.

மண்ணினை உண்டவன்,
மலரின் மேல்உறை
அண்ணல்கள் தமக்குஅளப்
பரிய அத்தன்ஊர்,
தண்ணறும் சாந்தமும்
பூவும் நீர்கொடு
விண்ணவர் தொழுதுஎழு
விசய மங்கையே.

— சம்பந்தர்

மண்ணினை உண்டவன் : உலகை உண்ட திருமால். மலரின் மேல் உறை அண்ணல் : பிரமன். அத்தன் : தலைவன். விசயமங்கை: திருவிசயமங்கை என்னும் தலம்.

மானம்ஆக் குவ்வன;
மாசுநீக் குவ்வன;
வானஉள் கச்செலும்
வழிகள்காட் டுவ்வன;
தேனும்வண் டும்இசை
பாடும்தே வன்குடி
ஆன்அஞ்சா டும்முடி
அடிகள்வே டங்களே.

— சம்பந்தர்

மானம்: பெருமை. தேவன்குடி: திருந்துதேவன்குடி எனும் தலம். குவ்வன, டுவ்வன என்பன, குவன, டுவன என்பவற்றின் இரட்டிப்பு. இப்புள்ளி எழுத்துக்கள் செய்யுள் ஓசையை நிரப்ப வந்தன. ஆக்குவன, நீக்குவன, காட்டுவன என்பனவே சொற்கள்.

கோலமா மலரொடு தூபமும்
சாந்தமும் கொண்டுபோற்றி,
வாலியார் வழிபடப் பொருந்தினர்
திருத்துமாங் கனிகள்உந்தி,
ஆலுமா காவிரி வடகரை
அடைகுரங் காடுதுறை
நீலமா மணிமிடற்று அடிகளை
நினைய,வல் வினைகள்வீடே.

— சம்பந்தர்

கோலமாமலர்: அழகிய பெரியமலர். பொருந்தினர்: அமர்ந்திருந்தார். திருந்து: சிறந்த. ஆலும்: அசைந்து வருகிற. குரங்காடுதுறை: திருவடகுரங்காடுதுறை எனும்தலம். நீலமாமணிமிடற்று அடிகள். நீல கண்டனாகிய சிவபிரான். வீடே: விடுதலையாம்.

பாலொடு நெய்,தயிர்
பலவும் ஆடுவர்;
தோலொடு நூல்இழை
துதைந்த மார்பினர்;
மேலவர் பரவுவெண்
காடு மேவிய
ஆலமது அமர்ந்தஎம்
அடிகள் அல்லரே.

— *சம்பந்தர்*

துதைந்த: அணிந்த. மேலவர்: மேன்மையாளர். வெண்காடு: திருவெண்காடு என்னும் தலம். ஆலம் அது: கல்லாலமரமாகிய அந்த இடம்.

பிடிஎலாம் பின்செலப்
பெருங்கைமா மலர்தழீஇ,
விடியலே தடமூழ்கி,
விதியினுல் வழிபடும்
கடிஉலாம் பூம்பொழில்
கானப்பேர் அண்ணல்! நின்
அடிஅலால் அடைசரண்
உடையரோ அடியரே.

— *சம்பந்தர்*

பிடி : பெண்யானை. பெரும்கைமா : பெரிய துதிக்கையை உடைய ஆண்யானை. விடியல் : புலர் பொழுது. தடம் : தடாகம். கடிஉலாம் : மணம்வீசும். கானப்பேர் : காளையார்கோவில். அடைசரண் : புகலிடம்.

கைப்போது மலர் தூவிக்
காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத்
தொழநின்ற முதல்வனை
அப்போடு மலர் தூவி
ஐம்புலனும் அகத்துஅடக்கி,
எப்போதும் இனியானை
என்மனத்தே வைத்தேனே.

— அப்பர்

கைப்போது : கையாகிய பூ. முப்போது : மூன்றுவேளை. அப்போடு : நீரோடு. ஐம்புலன் : மெய், வாய், கண், மூக்கு, செவி. அகத்து : உள்ளே. அடக்கி : அடங்கச் செய்து. எப்போதும் : எக்காலத்தும்.

சகமலாது அடிமை இல்லை;
　　தானலால் துணையும் இல்லை;
நகமெலாம் தேயக் கையால்
　　நாள்மலர் தொழுது தூவி
முகமெலாம் கண்ணீர் மல்க
　　முன்பணிந்து ஏத்தும் தொண்டர்
அகமலால் கோயில் இல்லை;
　　ஐயன்ஐ யாற னார்க்கே.

— அப்பர்

சகம்: உலகம். நாள்மலர்: அன்று அலர்ந்தபூ. அகம்: உள்ளம். உள்ளமே கோயில் என்ப. சகமலாது அடிமையில்லை என்பது உலகம் முழுதுமே அடிமை என்பதைக் காட்டுகிறது.

தேன்உடை மலர்கள் கொண்டு
    திருந்துஅடி பொருந்தச் சேர்த்தி,
ஆன்இடை அஞ்சும் கொண்டே
    அன்பினால் அமர ஆட்டி,
வான்இடை மதியம் சூடும்
    வலம்புரத்து அடிகள் தம்மை
நான்அடைந்து ஏத்தப் பெற்று
    நல்வினைப் பயன்உற் றேனே.

— அப்பர்

வான் இடை மதியம் சூடும்; விண்ணிலுள்ள திங்களை அணிந்த. வலம்புரம்: ஒருதலம். அடிகள்: சிவ பெருமான். உற்றேன்: அடைந்தேன்.

பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தற்குப் பத்தர் ஆகி,
அரும்பொடு மலர்கள் கொண்டுஆங்கு
ஆர்வத்தை உள்ளே வைத்து,
விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல் லார்க்கு,
கரும்பினில் கட்டி போல்வார்,
கடவூர்வீ ரட்ட னாரே.

— அப்பர்

பெரும் புலர் காலை : அதிகாலைப்போது. மூழ்கி : நீராடி. பித்தன் : சிவபெருமான். அரும்பு : மலரும் தறுவாயி லுள்ள மொட்டு. ஆர்வம் : அன்பு. தூபம் : சாம்பிராணி, வத்திமுதலியவற்றின் புகை. விதியினால் : முறைப்படி. கரும்பினில் கட்டி : கரும்பைப் பிழிந்து சாற்றைக் காய்ச்சி எடுத்த கருப்புக்கட்டி. கடவூர் : திருக்கடவூர் என்ற எட்டு வீரட்டத்துள் ஒருதலம்.

கற்றுக் கொள்வன
வாயுள; நாவுள;
இட்டுக் கொள்வன
பூவுள நீர்உள;
கற்றைச் செஞ்சடை
யான்உளன்; நாம்உளோம்;
எற்றுக் கோநம
னால்முனிவு உண்பதே.

— *அப்பர்*

கற்றை: கூட்டமான. செஞ்சடையான்: சிவந்த சடை முடியையுடைய சிவபெருமான். எற்றுக்கோ: எதற்காகவோ. நமன்: எமன். முனிவு: கோபம்.

தொழுது தூமலர்
தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று
அரற்றுகின் ருரையும்
பொழுது போக்கிப்
புறக்கணிப் பாரையும்
எழுதும் கிழ்க்கணக்கு;
இன்னம்பர் ஈசனே.

— அப்பர்

தூ : பரிசுத்தமான. காமுற்று : விரும்பி. அரற்றுதல். ஓலமிடுதல். புறக்கணித்தல் : பொருட்படுத்தாதிருத்தல். கீழ்க்கணக்கு : கணக்கின் கீழ், ஈசன் இரண்டு கணக்கின் கீழ் உலகோரைப் பதிந்து வருகிருன். ஒருபக்கம் தொழுது, மலர் தூவி ஓலமிடுபவர் ; இன்னெருபுறம் வீணுகப் பொழுது போக்கிப் புறக்கணிப்பவர்.

வாழ்த்த வாயும்,
நினைக்க மடநெஞ்சும்,
தாழ்த்தச் சென்னியும்
தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர்
தூவித் துதியாதே
வீழ்த்த வா,வினை
யேன்நெடுங் காலமே.

— *அப்பர்*

மடநெஞ்சு : அறியாமையுடன் கூடிய மனம். தாழ்த்த : வணங்க. சென்னி : தலை. சூழ்த்த : சேர்ந்த. சூழ்ந்த என்பதின் திரிபு. வீழ்த்தவா : வீணாக்கினேனே,

ஆமலி பாலும் நெய்யும்
ஆட்டிஅர்ச் சனைகள் செய்து,
பூமலி கொன்றை சூட்டப்
பொருததன் தாதை தாளைக்
கூர்மழு ஒன்றால் ஓச்சக்
குளிர்சடைக் கொன்றை மாலைத்
தாமம்நற் சண்டிக்கு ஈந்தார்
சாய்க்காடு மேவி னாரே.

— அப்பர்

ஆ: பசு. மலி: நிறைந்த. பொருத: பொறுக்காத. தாதை: தந்தையாகிய எச்சதத்தன். ஓச்ச: வெட்ட. தாமம்: திருமாலை. சண்டி: சண்டீச நாயனார். சாய்க்காடு: திருச்சாய்க்காடு எனும் தலம்.

ஆனிடை ஐந்தும்
ஆடுவர்; ஆர்இருள்
கானி டைநடம்
ஆடுவர் காண்மினோ;
தேனி டைமலர்
பாயும்நெய்த் தானனை
வானி டைத்தொழு
வார்வலி வாணரே.

— அப்பர்

ஆனிடை ஐந்து : பஞ்சகவ்வியம். ஆர்இருள் : நடுஇரவு. கானிடை : சுடுகாட்டில். நெய்த்தானன் : திருநெய்த் தானம் எனும் தலத்தில் எழுந்தருளிய எம்பெருமான். வலிவாணர் : வலிமையோடு வாழ்பவராவர்.

ஒழுகும் மாடத்துள்
ஒன்பது வாய்தலும்
கழுகுஅ ரிப்பதன்
முன்னம், கழல்அடி
தொழுது கைகளால்
தூமலர் தூவிநின்று
அழும்அ வர்க்குஅன்பன்,
ஆனைக்கா அண்ணலே.

— அப்பர்

ஒழுகும் மாடம் : ஓட்டை வீடாகிய உடம்பு. ஒன்பது வாய்தல் : (உடம்புக்குள் இருக்கும்) ஒன்பதுவழி. அரிப்பது : கொத்துவது. கழல்அடி : சிலம்பணிந்த திருவடி. ஆனைக்கா : திருவானைக்காவல் என்னும் தலம்.

தேவாரம் – திருமுறை 6

திருநாமம் அஞ்செழுத்தும்
செப்பார் ஆகில்,
தீவண்ணர் திறம்ஒருகால்
பேசார் ஆகில்,

ஒருகாலும் திருக்கோவில்
சூழார் ஆகில்,
உண்பதன்முன் மலர்பறித்திட்டு
உண்ணுர் ஆகில்,

அருநோய்கள் கெட,வெண்ணீறு
அணியார் ஆகில்,
அளிஅற்ருர் பிறந்தவாறு
ஏதோ என்னில்,

பெருநோய்கள் மிகநலியப்
பெயர்த்தும் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி
இறக்கின் ருரே.

— அப்பர்

தீவண்ணர் : சிவபெருமான். ஒருகாலும் : ஒருமுறையாவது. சூழ்தல் : வலம் வருதல். அளி : கருணை. பெயர்த்தும் : திரும்பவும்.

நிலைபெறுமாறு எண்ணுதியேல்
நெஞ்சே! நீ,வா!
நித்தலும்எம் பிரானுடைய
கோயில் புக்கு,

புலர்வதன்முன் அலகுஇட்டு,
மெழுக்கும் இட்டு,
பூமாலை புனைந்துஏத்திப்
புகழ்ந்து பாடி,

தலையாரக் கும்பிட்டு,
கூத்தும் ஆடி,
"சங்கரா! சயபோற்றி!
போற்றி!" என்றும்

'அலைபுனல்சேர் செஞ்சடைஎம்
ஆதி!' என்றும்,
"ஆரூரா!" என்றென்றே
அலறு நில்லே.

— *அப்பர்*

அலகு இடுதல் : பெருக்குதல். அலைபுனல்சேர் செஞ் சடை எம் ஆதி : திரைவீசும் கங்கையைச் சிவந்தசடையில் தாங்கிய எங்கள் முழுமுதற்கடவுள்.

நெய்யினெடு பால்,இள நீர்
ஆடி னன்காண்!
நித்தமண வாளன்என
நிற்கின் றன்காண்!
கையில்மழு வாளொடுமான்
ஏந்தி னன்காண்!
காலன்உயிர் காலால்
கழிவித் தான்காண்!
செய்யதிரு மேனி,வெண்
ணீற்றி னன்காண்!
செஞ்சடைமேல் வெண்மதியம்
சேர்த்தி னன்காண்!
வெய்யகனல் விளையாட்டு
ஆடி னன்காண்!
விண்இழிதண் வீழி
மிழலை யானே.

— அப்பர்

கழிவித்தான் : போக்கினன். செய்யதிருமேனி : சிவந்த அழகிய உடம்பு. கனல் விளையாட்டு : தீ ஏந்தி ஆடுதல்.

மருதங்க ளாமொழிவர்
மங்கை யோடு
வானவரும் மால்,அயனும்
கூடித் தங்கள்
சுருதங்க ளால்துதித்து,
தூநீர் ஆட்டித்
தோத்திரங்கள் பலசொல்லி,
தூபம் காட்டிக்
கருதும்கொல் எம்பெருமான்
செய்குற் றேவல்
என்பார்க்கு, வேண்டும்வ
ரம்கொ டுத்து,
விருதங்க ளாநடப்பர்
வெள்ஏ று ஏறி
வெண்காடு மேவிய
விகிர்த ஞரே.

— *அப்பர்*

மருதங்கள் : மருதநிலத்தில் காதலியோடு கூடிவாழும் அக ஒழுக்கம். சுருதங்கள் : மறைகள். விருதம் : விரதம். வெள்ளேறு : வெள்ளிய விடை. விகிர்தன் : வேறுபாடுடையவன்.

விடிவதுமே வெண்நீற்றை
மெய்யில் பூசி
வெளுத்துஅமைந்த கீளொடுகோ
வணமும் தற்று,
"செடியுடைய வல்வினைநோய்
தீர்ப்பாய்!" என்றும்,
"செல்கதிக்கு வழிகாட்டும்
சிவனே!" என்றும்,
"துடிஅனைய இடைமடவாள்
பங்கா!" என்றும்,
"சுடலைதனில் நடமாடும்
சோதீ!" என்றும்,
கடிமலர் தூய்த் தொழும்அடியார்
நெஞ்சின் உள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக்
காண லாமே.

— *அப்பர்*

கீள் : கோவணத்தோடுபொருந்தக்கட்டும் கயிறு. தற்று: கட்டி. செடியுடைய : அடர்ந்த. துடி : உடுக்கு. கடி : மணம். கன்றுப்பூர் : ஒருதலம். நடுதறி : நடுதறி நாதர். (இது கன்றுப்பூர் இறைவன் பெயர்)

சிந்தித்து என்றும்
நினைந்துஎழு வார்கள்
சிந்தை யில்திக
ழும்சிவன் தன்னைப்
பந்தித் தவினைப்
பற்றுஅறுப் பானை
பாலொடுஆன் அஞ்சும்
ஆட்டுஉகந் தானை
அந்தம் இல்புக
ழாள்உமை நங்கை
ஆத ரித்து
வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக்
கம்பன்எம் மானை,
காணக் கண்அடி
யேன்பெற்ற வாறே.

— சுந்தரர்

பந்தித்த: கட்டுப்படுத்திய. பற்று: பிடிப்பு. அந்தம் இல்: முடிவு இல்லாத. கந்தம்: மணம். வார்: நீண்ட. கம்பன்: காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கிற சிவ பெருமான் பெயர்.

தேவாரம் – திருமுறை 7

மாவை உரித்துஅதள்கொண்டு
அங்கம் அணிந்தவனை,
வஞ்சர் மனத்துஇறையும்
நெஞ்சுஅணு காதவனை,
மூவர் உருத்தனதாம்
மூல முதல்கருவை,
மூசிடு மால்விடையின்
பாகனை, ஆகம்உறப்
பாவகம் இன்றி,மெய்யே
பற்றும் அவர்க்குஅமுதை,
பால்,நறு நெய்,தயிர்ஐந்து
ஆடு பரம்பரனை,
காவல் எனக்குஇறைஎன்று
எய்துவது என்றுகொலோ?
கார்வயல் சூழ்கானப்
பேர்உறை காளையையே.

— சுந்தரர்

மா : யானை. அதள் : தோல். அங்கம் : உடம்பு. இறையும் : சிறிதும். மூவர் : அயன், அரி, அரன். மூசிடுதல் : பெருமூச்சு விடுதல். பாகன் : செலுத்துபவன். பாவகம் : பாசாங்கு. கார்வயல் : முகில் பொழியும் செய். கானப்பேர் : காளையார் கோவில். காளை : அத்தல இறைவன் திருப்பெயர்.

தேனை ஆடுமுக்
கண்ண ரோ! மிகச்
செய்ய ரோ! வெள்ளை
நீற்றரோ!

பால்நெய் ஆடலும்
பயில்வ ரோ! தமைப்
பற்றி னார்கட்கு
நல்லரோ!

மானை மேவிய
கண்ணி னாள், மலை
மங்கை நங்கையை
அஞ்ச ஓர்

ஆனை ஈர்உரி
போர்ப்ப ரோ! நமக்கு
அடிகள் ஆகிய
அடிகளே.

— *சுந்தரர்*

பயில்தல்: பழகுதல். மானைமேவிய கண்ணினாள்: மான் கண்ணை ஒத்த கண்ணையுடையவள். மலைமங்கை: பார்வதி. ஆனைஈர்உரி: யானையை உரித்ததோல்.

அணிகொள் ஆடை,அம்
பூண்அணி மாலை,
அமுது செய்து,அமு
தம்பெறு சண்டி,
இணைகொள் ஏழெழு
நூறிரு பனுவல்
ஈன்ற வன்திரு
நாவினுக்கு அரையன்,
கணைகொள் கண்ணப்பன்,
என்றுஇவர் பெற்ற
காதல் இன்அருள்
ஆதரித்து அடைந்தேன்;
திணைகொள் செந்தமிழ்
பைங்கிளி தெரியும்
செல்வத் தென்திரு
நின்றியூ ரானே.

— சுந்தரர்

பூண் : ஆபரணம். ஏழெழுநூறுஇரு பனுவல்: நாலாயிரத்துத் தொள்ளாயிரத்து இரண்டு. இங்கே திருநாவுக்கரசர் தேவாரத்துக்குக் கணக்குக் கொடுக்கிறார் சுந்தரர். திணை : ஐந்திணை.

அருமணியை, முத்தினை,ஆன்
அஞ்சும் ஆடும்
அமரர்கள்தம் பெருமானை,
அருமறையின் பொருளை,
திருமணியை, தீங்கரும்பின்
ஊறல்,இரும் தேனை,
தெரிவுஅரிய மாமணியை,
திகழ்தருசெம் பொன்னை,
குருமணிகள் கொழித்துஇழிந்து
சுழித்துஇழியும் திரைவாய்க்
கோல்வளையார் குடைந்துஆடும்
கொள்ளிடத்தின் கரைமேல்
கருமணிகள் போல்நீலம்
மலர்கின்ற கழனிக்
கானாட்டு முள்ளூரில்
கண்டுதொழு தேனே.

— சுந்தரர்

ஊறல் : சாறு. குரு : நிறமுள்ள. இழியும் : தள்ளும். திரை : அலை. நீலம் : நீலோற்பலம். கழனி : வயல் கானாட்டுமுள்ளூர் : கொள்ளிடக்கரையிலுள்ள ஒரு தலம்.

போற்றிஎன் வாழ்முதல்
ஆகிய பொருளே!
புலர்ந்தது; பூங்கழற்கு
இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து
எமக்குஅருள் மலரும்
எழில்நகை கொண்டுநின்
திருவடி தொழுகோம்;
சேற்றுஇதழ்க் கமலங்கள்
மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை
சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடிஉடை
யாய்!எமை உடையாய்!
எம்பெரு மான்பள்ளி
எழுந்தரு ளாயே!

— *மணிவாசகர்*

வாழ்முதல் : வாழ்வுக்கு மூலம். புலர்ந்தது : விடிந்தது. பூங்கழற்கு : அழகிய திருவடிகட்கு. ஏற்றுயர் கொடி : சிறந்த இடபக் கொடி.

பொருட்பற்றிச் செய்கின்ற
　　பூசனைகள் போல்விளங்க,
செருப்புஉற்ற சீர்அடி,
　　வாய்க்கலசம், ஊன்அமுதம்
விருப்புஉற்று வேடனார்
　　சேடுஅறிய மெய்குளிர்ந்து,அங்கு
அருள்பெற்று நின்றவா
　　தோள்நோக்கம் ஆடாமோ!

— *மணிவாசகர்*

பொருள் : பூசைப்பொருள். கடவுள் கண்ணின் வைத்த அடியாதலின் 'சீர் அடி' என்றார். வேடனார் : கண்ணப்பனார். சேடு : மெய்யறிவு.

பங்கயம் ஆயிரம்
  பூவினில்ஓர் பூக்குறைய,
தம்கண் இடந்து,அரன்
  சேவடிமேல் சாத்தலுமே,
சங்கரன், எம்பிரான்
  சக்கரம்,மாற்கு அருளியவாறு
எங்கும் பரவிநாம்
  தோள்நோக்கம் ஆடாமோ!

— *மணிவாசகர்*

பங்கயம் : தாமரை. இடந்து : தோண்டி. மாற்கு : திருமாலுக்கு. பரவி : துதித்து. திருமால் சிவபூசை செய்யுங்கால் ஆயிரம் தாமரை மலரில் ஒன்று குறைய, தம் கண்ணைப்பிடுங்கி அருச்சிக்க, சிவபெருமான் திருமாலுக்குச் சக்கரம் அளித்தான் என்பர்.

நீண்ட மாலும்
அயனும்வெருவ
நீண்ட நெருப்பை,
விருப்பிலேனை
ஆண்டு கொண்ட
என் ஆர் அமுதை
அள்ளூறு உள்ளத்து
அடியார்முன்
வேண்டும் தனையும்
வாய்விட்டு
அலறி விரையார்
மலர் தூவி,
பூண்டு கிடப்பது
என்றுகொல்லோ?
என்பொல் லாமணி
யைப்புணர்ந்தே.

— *மணிவாசகர்*

நீண்ட : பேருரு எடுத்த. வெருவ : அஞ்ச. நெருப்பு : தீ. (அண்ணாமலை) அள்ளூறுதல் : வாய் ஊறுதல். தனை : அளவு. விரை : மணம். பொல்லாமணி : துளைக்கப் படாத இரத்தினம். புணர்ந்து : கூடி.

முத்தனே! முதல்வா!
முக்கணா! முனிவா!
மொட்டுஅரு மலர்பறித்து
இறைஞ்சி,
பத்தியாய் நினைந்து
பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்துஅருள்
செய்யும்
சித்தனே! செல்வத்
திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே
வியசீர்
அத்தனே! அடியேன்
ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்றுஅரு-
-ளாயே!

— *மணிவாசகர்*

பரகதி: வீட்டின்பம். சித்தன்: எண்ணியதைத் தருபவன். குருந்தம்: மணிவாசகருக்கு அருளுபதேசம் செய்த மரத்தின் நிழல். அதெந்து: 1. அது என்ன. 2. அஞ்சேல்.

சேவேந்து வெல்கொடி
யானே! என்னும்;
சிவனே!என் சேமத்
துணையே! என்னும்;
மாவேந்து சாரல்
மகேந்தி ரத்தில்
வளர்நாய கா!இங்கே
வாராய் என்னும்;
பூஏந்தி மூவா
யிரவர் தொழஅப்
புகழ்ஏந்து மன்று
பொலிய நின்ற
கோவே!என் னும்;குணக்
குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக்
கூத்த னையே.

— திருமாளிகைத்தேவர்

சே: இடபம். சேமம்: காவல். மா: மிருகங்கள். மூவாயிரவர்: தில்லைவாழ் அந்தணர். மன்று: பொன்னம் பலம். இது தாயார் பாசுரம்.

பூத்திரள் உருவம்
செங்கதிர் விரியாப்
புந்தியில் வந்தமால்
விடையோன்,
தூத்திரள் பளிங்கில்
தோன்றிய தோற்றம்
தோன்றநின் றவன்வளர்
கோயில்,
நாத்திரள் மறைஓர்ந்து,
ஓமகுண் டத்து
நறுநெயால் மறையவர்
வளர்த்த
தீத்திரள் அரும்பும்
பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்
பலமே.

— கருவூர்த்தேவர்

பூத்திரள் : மலர்த்தொகுதி. மால் : திருமால். தூ : தூய. ஓர்ந்து : உணர்ந்து. பெரும்பற்றப்புலியூர் : தில்லையின் பெயர்களில் ஒன்று.

மானைப் புரையும் மடமென் நோக்கி
  மாமலை யாளோடும்,
ஆனஞ் சாடும் சென்னி மேல்ஓர்
  அம்புலி சூடும்அரன்,
தேனை, பாலைத் தில்லை மல்கு
  செம்பொனின் அம்பலத்துக்
கோனை, ஞானக் கொழுந்து தன்னை,
  கூடுவது என்றுகொலோ?

— *கண்டராதித்தர்*

புரையும் : ஒத்த. மடம் : இளமை. மா : பெருமை பொருந்திய. ஆன் அஞ்சு : பஞ்ச கவ்வியம். சென்னி : திருமுடி. மல்குதல், செழித்தல்.

தூவிநீரொடு பூஅவைதொழுது
ஏத்துகையினர் ஆகி,மிக்கதோர்
ஆவிஉள் நிறுத்தி,
அமர்ந்துஊறிய அன்பினராய்த்
தேவர்தாம்தொழ ஆடியதில்லைக்
கூத்தனை,திரு வாலிசொல்இவை
மேவ வல்லவர்கள்
விடையான்அடி மேவுவரே.

— *திருவாலியமுதனார்*

பூஅவை : மலர்கள். அமர்ந்து : விரும்பி. திருவாலி : திருவாலியமுதனார். மேவ : துதிக்க. மேவுவர் : அடைவர்.

தாதையைத் தாள்அற வீசிய
சண்டிக்கு,இவ் அண்டத் தொடும்உடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும், போனகமும், அருளி,
சோதி மணிமுடித் தாமமும்,
நாமமும், தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனார்

தாதை : (இங்கே) எச்சதத்தன். சண்டி : சண்டேசுர நாயனார். போனகம் : (சிவநின்மாலியமான) அமுதம். தாமம் : மாலை. நாமம் : (சண்டீசர் என்ற) திருப்பெயர். நாயகம் : தலைமை. பாதகத்துக்குப் பரிசு வைத்தான் : தந்தை தாளை வெட்டிய குற்றத்திற்குப் பட்டம் வழங்கினான்.

சூடுவன்; நெஞ்சிடை
வைப்பன்; பிரான்என்று
பாடுவன்; பன்மலர்
தூவிப் பணிந்து,நின்று
ஆடுவன்; ஆடி
அமரர்பி ரான்என்று
நாடுவன் யான்இன்று
அறிவது தானே.

— *திருமூலர்*

நெஞ்சிடை வைப்பன் : உள்ளத்து இருத்துவன். நாடுவன் : அடைவேன்.

அம்புயம், நீலம்,
கழுநீர், அணிநெய்தல்,
வம்புஅவிழ் பூகமும்,
மாதவி, மந்தாரம்,
தும்பை, வகுளம்,
சுரபுன்னை, மல்லிகை,
செண்பகம், பாதிரி,
செவ்வந்தி சாத்திடே.

— *திருமூலர்*

அம்புயம் : தாமரை. நீலம் : நீலோற்பலம். கழுநீர் : செங்கழுநீர். வம்பு : மணம். பூகம் : பாக்கு. வகுளம் : மகிழம்பூ. சாத்திடே : சாத்துக.

திருமந்திரம் - திருமுறை 10

சாங்கம தாகவே
சந்தொடு சந்தனம்,
தேங்கமழ் குங்குமம்,
கர்ப்பூரம், கார்அகில்
பாங்கு படப்பனி
நீரால் குழைத்துவைத்து
ஆங்கே அணிந்து,நீர்
அருச்சியும் அன்பொடே.

— *திருமூலர்*

சாங்கமதாகவே : முழுமையாகவே. அபிடேகப் பொருள்களைச் சிறப்பித்துச் சொல்கின்றது இப்பாடல்.

திருமந்திரம் - திருமுறை 10

அன்புட னேநின்று
　　அமுதமும் ஏற்றியே
பொன்செய் விளக்கும்
　　புகைதீபம் திசைதொறும்
துன்பம் அகற்றித்
　　தொழுவோர் நினையுங்கால்
இன்புட னேவந்து
　　எய்திடும் முத்தியே.

— *திருமூலர்*

அமுதம் : நிவேதனம். பொன்செய்விளக்கு: தங்கவிளக்கு. திசை தொறும் : எல்லாத்திக்குகளிலும். நினையுங்கால் : (இறைவனை) எண்ணும்போது. முத்தி : வீடுபேறு.

திருமந்திரம் - திருமுறை 10

கோது குலாவிய
    கொன்றைக் குழல்சடை
மாது குலாவிய
    வாள்நுதல் பாகனை
யாது குலாவி
    அமரரும் தேவரும்
கோது குலாவிக்
    குணம்பயில் வாரே.

— *திருமூலர்*

கோது குலாவிய கொன்றை : நரம்பு முதலியன பொருந்திய கொன்றைப்பூ. குழல் சடை: முறுக்கிய சடை. மாது : அம்பிகை வாள்நுதல் : ஒளி பொருந்திய நெற்றி பாகன் : பங்கில் உடைய சிவபெருமான். யாதுகுலாவி : எந்த வகையிலாவது. கோது : உள்ளக் களிப்பு.

சிந்தனை செய்ய மனம்அமைத்
தேன்;செப்ப நாஅமைத்தேன்;
வந்தனை செய்யத் தலைஅமைத்
தேன்;கை தொழஅமைத்தேன்;
பந்தனை செய்வதற்கு அன்புஅமைத்
தேன்;மெய் அரும்பவைத்தேன்;
வெந்தவெண் ணீறுஅணி ஈசற்கு
இவையான் விதித்தனவே.

— சேரமான்பெருமாள்

பந்தனை : கட்டுப்படுத்துதல். மெய் : உடம்பு. அரும்ப : புளகாங்கிதம் எய்த. விதித்தன . அமைத்துக் கொண்டவை.

உருவு பலகொண்டு
உணர்வரிதாய் நிற்கும்
ஒருவன் ஒருபால்
இருக்கை,—மருவினிய
பூக்கையில்கொண்டு எப்பொழுதும்
புத்தேளிர் வந்துஇறைஞ்சும்
மாக்கயிலை என்னும் மலை.

— நக்கீரர்

ஒருவன் : ஒப்பற்றவனான சிவபெருமான். இருக்கை : உறைவிடம். மருவினிய : செய்வதற்கு இனிமையான. புத்தேளிர் : தேவர். மா : சிறந்த.

மலர்ந்த மலர்தூவி,
மாமனத்தைக் கூப்பி,
புலர்ந்தும் புலராத
போதும்—கலந்துஇருந்து
கண்ணீர் அரும்பக்
கசிவார்க்குக் காண்பஎளியன்
தெள்நீர்ச் சடைக்கரந்த தே.

— கபிலர்

கூப்பி : ஒன்றுபடுத்தி. புலர்ந்தும் புலராதபோது : விடிந்தும் விடியாத காலை நேரம். தெள்நீர் . தெளிந்த நீரையுடைய கங்கையை. கரந்த : ஒளித்துவைத்த. தே: கடவுளாகிய சிவபெருமான்.

உயிரா யினஅன்பர் தேர்வரக்
கேட்டு,முன் வாட்டம்உற்ற
பயிர்ஆர் புனல்பெற்றது என்ன,நம்
பல்வளை பான்மைகளாம்
தயிரார்பால் நெய்யோடும் ஆடிய
ஏகம்பர் தம்அருள்போல்
கைஇரா வளை,அழுந் தக்கச்சு
இறுத்தன, கார்மயிலே.

— பட்டினத்துப்பிள்ளையார்

உயிராயின அன்பர் : உயிரை ஒத்த காதலர். வாட்டம் உற்ற பயிர் ஆர்புனல் பெற்றது என்ன : வாடியபயிர் நிறைந்த நீரைப் பெற்றால் என்ன. நம்பல்வளை : கூட்டமாகிய வளைகளையணிந்த நம்பெண். பான்மை : சிறப்பு. ஏகம்பர் : காஞ்சியில் எழுந்தருளியிருக்கும் கடவுள். கை இராவளை : வளைகள் கையில் தங்கா. அழுந்தக்கச்சு இறுத்தன : தனம் அழுந்துதலால் ரவிக்கை அறுபட்டன. கார்மயில் : மயிலனையபெண். இது தாயார் பாசுரம்.

சிந்திக் கவும்,உரை யாடவும்,
செம்மல ரால்கழல்கள்
வந்திக் கவும்,மனம் வாய்,கரம்
என்னும் வழிகள்பெற்றும்,
சந்திக் கிலர்சிலர் தெண்ணர்;தண்
ஆர்தில்லை அம்பலத்துள்
அந்திக்கு அமர்திரு மேனிஎம்-
-மான்தன் அருள்பெறவே.

— நம்பியாண்டார் நம்பி

வந்தித்தல்: வழிபாடுசெய்தல். சந்திக்கிலர்: காண மாட்டார். தெண்ணர்: அன்பில்லாதவர். அந்திக்கு அமர் திருமேனி: அந்திவானம் போன்ற செம்மேனி.

கண்ட போதில்,அப்
பெருந்தவப் பயனும்
கம்பம் மேவிய
தம்பெரு மானை,
வண்டுஉ லாம்குழல்
கற்றைமுன் தாழ
வணங்கி, வந்துஎழும்
ஆசைமுன் பொங்க,
கொண்ட காதலின்
விருப்புஅளவு இன்றி,
குறித்த பூசனைக்
கொள்கைமேற் கொண்டு,
தொண்டை அம்கனி
வாய்உமை நங்கை
தூய அர்ச்சனை
தொடங்குதல் புரிவாள்.

— *சேக்கிழார்*

கம்பம் : கச்சிஏகம்பம். குழல்கற்றை : கூட்டமான கூந்தல். தொண்டை அம்கனிவாய் : கொவ்வைக்கனி போன்ற அழகிய திருவாய். (அம்பிகையின் சிவவழிபாடு இது முதல் 4 பாடல்கள்)

பெரியபுராணம் - திருமுறை 12

உம்பர் நாயகர்
பூசனைக்கு அவர் தாம்
உரைத்த ஆகமத்து
உண்மையே தலை நின்று,

எம்பி ராட்டி அர்ச்
சனைபுரி வ தனுக்கு
இயல்பில் வாழ்திருச்
சேடிய ரான,

கொம்ப னார்கள், பூம்
பிடகைகொண்டு அணையக்
குலவு மென் தளிர்
அடியிணை ஒதுங்கி,

அம்பி காவன
மாம்திரு வனத்தில்
ஆன தூ நறும்
புதுமலர் கொய்தாள்.

— *சேக்கிழார்*

அவர் : சிவபெருமான். பூம்பிடகை : பூக்குடலை.

கொய்த பன்மலர்
கம்பைமா நதியில்
குலவு மஞ்சனம்
நிலவுமெய்ப் பூச்சு,
நெய்த ரும்கொழும்
தூபதீ பங்கள்,
நிறைந்த சிந்தையில்
நீடிய அன்பின்
மெய்த ரும்படி
வேண்டின எல்லாம்
வேண்டும் போதினில்
உதவ,மெய்ப் பூசை
எய்த ஆகம
விதிஎலாம் செய்தாள்,
உயிர்கள் யாவையும்
ஈன்றஎம் பிராட்டி

— *சேக்கிழார்*

கம்பைமாநதி : காஞ்சியில் ஓடும் ஆறு. அம்பிகை எண்ணியாங்கு அபிடேக அருச்சனைக்குரிய பொருள்கள் எய்த, ஆகம விதிப்படி வழிபாடு செய்தாள் உலகனைத்தையும் ஈன்ற தலைவி என்க.

கரம்த ரும்பயன்
இதுஎன உணர்ந்து
கம்பம் மேவிய
உம்பர்நா யகர்பால்

நிரந்த காதல்செய்
உள்ளத்தள் ஆகி,
நீடு நன்மைகள்
யாவையும் பெருக,

வரம்த ரும்பொரு
ளாம்மலை வல்லி
மாறி லாவகை
மலர்ந்தபேர் அன்பால்

சிரம்ப ணிந்துஎழு
பூசை நாள்தோறும்
திருஉ ளம்கொளப்
பெருகியது அன்றே.

— *சேக்கிழார்*

கரம்தருபயன் : கைபெற்ற பயன். நிரந்த : நிரம்பிய.
வரம்தரும்பொருளாம் மலைவல்லி : எல்லோருக்கும் வரம் கொடுக்கின்றவளாகிய மலையரையன் பாவை.

வாசத் திருமஞ் சனம்,பள்ளித்
தாமம், சாந்தம், மணித்தூபம்,
தேசில் பெருகும் செழுந்தீபம்,
முதலா யினவும் திருஅமுதும்
ஈசற்கு ஏற்ற பரிசினுல்
அருச்சித்து அருள எந்நாளும்
பூசைக்கு அமர்ந்த பெருங்கூத்தர்
பொற்பார் சிலம்பின் ஒலி அளித்தார்.

— சேக்கிழார்

வாசம் : மணம். தேசு : ஒளி. திருஅமுது : நிவேதனப் பொருள். பரிசு : தன்மை. சேரமான் பெருமாளுக்கு அவர் செய்த பூசனைக்கு மகிழ்ந்து நடராசப் பெருமான் சிலம்பொலி காட்டினுர் என்பது கருத்து.

கற்பனை கடந்த சோதி
கருணையே உருவம் ஆகி,
அற்புதக் கோலம் நீடி,
அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும்
திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற
பூங்கழல் போற்றி! போற்றி!

— சேக்கிழார்

கற்பனைகடந்தசோதி: கற்பனைக்கு எட்டாத ஒளி. அற்புதக் கோலம்: அருமையான அழகு. நீடி: பெருகி. சிற்பரவியோமம்: சிதாகாசம். பொற்பு: அழகு. பூங்கழல்: மலரை ஒத்த திருவடி. போற்றி போற்றி: வணக்கம் வணக்கம்.

பாட்டு முதற்குறிப்பு

பாட்டுமுதல்	பக்கம்	பாட்டு முதல்	பக்கம்
அணிகொள்	34	காவிணைஇட்டும்	3
அம்புயம்	47	கைப்போது	16
அருமணியை	35	கொய்தபன்மலர்	58
அன்புடனே	49	கோதுகுலாவிய	50
ஆமலிபாலும்	23	கோலமா	13
ஆனிடைஐந்தும்	24	சகமலாது	17
உம்பர்நாயகர்	57	சாங்கமதாகவே	48
உயிராயின	54	சிந்தணைசெய்ய	51
உருவுபல	52	சிந்திக்கவும்	55
ஒழுகும்மாடத்துள்	25	சிந்தித்து	31
கண்டபோதில்	56	சூடுவன்	46
கரம்தரும்	59	செந்தமிழர்	7
கல்நெடிய	6	சேவேந்து	41
கற்பணை	61	தாதையை	45
கற்றுக்கொள்வன	20	திருநாமம்	26

பாட்டு முதற்குறிப்பு (தொடர்ச்சி)

பாட்டுமுதல்	பக்கம்	பாட்டு முதல்	பக்கம்
தூவி நீரொடு	44	பொருட்பற்றி	37
தேனை ஆடு	33	போற்றி என்	36
தேன் உடை	18	மண்ணினை	11
தொண்டர் அஞ்சு	8	மருதங்களாமொழிவர்	29
தொழுது தூமலர்	21	மலர்ந்த மலர்	53
நிலைபெறுமாறு	27	மாவை உரித்து	32
நீண்டமாலும்	39	மானம்ஆக்குவ்வன	12
நெய்யினொடு	28	மானைப் புரையும்	43
பங்கயம்	38	முத்தனே	40
பாலினால்	1	வண்ணமலரானும்	4
பாலும் நெய்யும்	2	வம்பார்குன்றம்	5
பாலொடுநெய்	14	வாசத்திரு	60
பிடிஎலாம்	15	வாழ்த்தவாயும்	22
பூத்திரள்	42	விடிவதுமே	30
பெரும்புலர்	19	விளங்கு இழை	9
		வேனலானை	10

பூசையும், பூசைக்கு ஏற்ற
பொருள்களும், பூசை செய்யும்
நேசனும், பூசை கொண்டு
நியதியின் பேறு நல்கும்
ஈசனும் ஆகி, பூசை
யான் செய்தேன், எனும்என் போத
வாசனை அதுவும் ஆன
மறைமுதல் அடிகள் போற்றி.

— பரஞ்சோதிமுனிவர்.

LIBRARY, KOVI
38493

ப-6

திருமகள் அச்சகம்,
43 மகார்நோன்பு அக்ரஹாரம்,
காரைக்குடி.
போன் நிர். 313.